Koviloor Digital Library



குன்றக்குடி ஆறுமுகப்பெருமான் வருகைப் பாமாலை

(வைகாசி விசாகத் திருநாளில் ஆறுமுகப்பெருமான் சந்நிதியிலிருந்து ஆதினக் கொலுமண்டபத்திற்கு எழுந்தருளிய போது பாடிய பாமாலைகள்)

கவிஞர் பேரா. ம. கார்மேகம்
காரைக்குடி

பத்மா பதிப்பகம்,
50, ஸ்ரீ கணபதி இல்லம்,
கண்டனூர்ச் சாலை,
காரைக்குடி - 630 001.
தொலைபேசி : 04565 236572

ACC № 342254
Δ2111 3-5


Koviloor Digital Library

Koviloor Digital Library

3-5

குன்றக்குடி ஆறுமுகப்பெருமான் வருகைப் பாமாலை

(வைகாசி விசாகத் திருநாளில் ஆறுமுகப்பெருமான் சந்நிதியிலிருந்து ஆதினக் கொலுமண்டபத்திற்கு எழுந்தருளிய போது பாடிய பாடல்கள்)



கவிஞர் பேரா. ம. கார்மேகம்
காரைக்குடி

பத்மா பதிப்பகம்,
50, ஸ்ரீ கணபதி இல்லம்,
கண்டனூர்ச் சாலை,
காரைக்குடி - 630 001.
தொலைபேசி : 04565 236572

Koviloor Digital Library

நூலின் பெயர் : குன்றக்குடி ஆறுமுகப்பெருமான் வருகைப் பாமாலை

ஆசிரியர் : பேராசிரியர் ம.கார்மேகம்

உரிமை : ஆசிரியருக்கு

முதல் பதிப்பு : மே, 2021

வெளியீடு : பத்மா பதிப்பகம்,
50, ஸ்ரீ கணபதி இல்லம்,
கண்டனூர்ச் சாலை,
காரைக்குடி - 630 001.

தொலைபேசி : 04565 - 236572

அளவு : டெம்மி

பக்கம் : 40

விலை : ரூ.35/-

கணினி &
அச்சாக்கம் : திருமகள் அச்சகம்,
“ஜெயசௌந்தர்”,
7G, ஜவஹர் தெரு,
நியூ டவுன், காரைக்குடி - 630 001.
போன் : 04565 - 232 991

Koviloor Digital Library

விசாக நாளில் பாடிய
வருகைப் பதிகம் 1996

பைந்தமிழ்த் தேரிலே பாரெலாம் சுற்றியே
பாசத்தை வளர்த்த தந்தை
பாட்டாளி மக்களைக் கூட்டாளி யாக்கியே
பரம்பாகச் சமன்செய்தவர்
செந்தமிழ் மறையினால் தினந்தோறும் பூசைகள்
செய்திட வழிதந்தவர்
செகத்துளோர் அனைவரும் சோதரர் என்றதோர்
சிந்தனை தந்த அடிகள்
வந்தனை செய்திட்ட வேலவா மாணிக்க
வல்லியின் அருமை மகனே
வள்ளிமண வாளனே தெய்வானை நாயகா
வடிவேலை ஏந்தி வருவாய்
சொந்தமாய் உன்னையே சுற்றிவரும் அன்பர்கள்
துயரோட்ட நீவருகவே
தொண்டுநெறி காத்திடும் பொன்னம்பல சுவாமிகள்
துணையான நீ வருகவே. (1)

அருணா சலப்பெயர் அடிகளார் வீற்றிருந்(து)
அன்பர்க்கு ஆசி நல்க
அருமையாம் தமிழ்கேட்க ஆன்றோர்கள் பலரிங்கே
அருகினில் சூழ்ந்தி ருக்க;
பொருளான சமயத்தைச் சமுதாய மேன்மைக்குப்
புரட்சியாய்க் கொண்டு செல்லப்
புறப்பட்ட அடிகளார் திறப்பட்ட நெறியிலே
பொன்னம் பலசு வாமிகள்

Koviloor Digital Library

அருளாளர் அன்புடன் அடியவர் கூடிடும்
அம்பலம் நீ வருகவே
ஆசையால் வேண்டினோம் ஆறுமுக நாதனே
அரங்கத்தில் நீ வருகவே
இருளாக இருக்கின்ற இதயத்தில் ஒளியேற்றி
இன்னருள் தரவருகவே
என்றைக்கும் அடிகளார் தமிழோசை ஒலிக்கின்ற
இடம்நோக்கி நீ வருகவே. (2)

தென்னையின் தோப்பும் செஞ்சாலி வயல்களும்
திசையெலாம் வளம்பெருக்க;
திரும்பிய இடமெலாம் தீந்தமிழ் இசையினால்
தெருவெங்கும் விழாச் சிறக்க
உன்னைப்போல் வேறொரு தெய்வம் இலையென்ற
உணர்ச்சியில் அன்பர் கூட்டம்
ஓம்எனும் பிரணவ உச்சரிப் பொன்றையே
உளத்தினில் தேக்கி நிற்க
விண்ணுயர் தென்னைசூழ் மருதாபுரிக் கெதிரில்
விளங்குகொலு மண்ட பத்தில்
வள்ளிமயில் தெய்வானை வாய்க்கின்ற துணையோடு
விரைந்திங்கு நீ வருகவே
தன்னைப்போல் பிறரையும் நேசித்த அடிகளார்
தரிசனம் தந்த இடமாம்
தமிழோசை கேட்டிடும் கொலுமண்ட பந்தன்னில்
தங்கவேல் நீ வருகவே. (3)

செட்டியின் வடிவிலே மருதுவின் பிளவைநோய்
தீர்த்தபே ரருளா ளனே
சிந்தையில் வைத்தவர் துயரெலாம் துடைத்திடத்
திருவருள் புரியும் முருகா

Koviloor Digital Library

எட்டியே நின்றாலும் எல்லோரின் கண்ணிலும்
எப்போதும் தோன்றி நிற்பாய்
இருகரம் கூப்பியுன் இணையடி தொழுதிட
எழில்குமர நீ வருகவே
கொட்டிடும் மேளங்கள் கூடிய இசையுடன்
கொலுமண்ட பம்வருகவே
கூடிடும் அடியவர் கூட்டம் களித்திடக்
கோலமயில் மீது வருவாய்
வட்டியும் முதலுமாய் மனத்தையும் உயிரையும்
வைத்திங்கு வணங்கி நின்றோம்
வளர்பொன்னம் பலசாமி வழிகாட்டும் மண்டபம்
மணங்கூட்ட நீ வருகவே ! (4)

படைக்கின்ற பிரமன்உன் பாதம் பணிந்துதன்
பாவத்தைப் போக்கிக் கொண்டான்
பைந்தமிழ் அகத்தியன் உன்னடி பணிந்துதான்
பாராட்டும் அருளைப் பெற்றான்
விடைக்கொடிப் பெருமானும் பிரணவப் பொருளுக்கு
விடைகேட்டுப் பெருமை கொண்டான்
வேண்டிய பாண்டவர் வேதனை தீர்ந்திட
வெற்றியைத் தந்த முருகா
கிடைக்கின்ற கல்வியும் செல்வமும் உன்னருள்
கிடைத்தாலே வந்து சேரும்
கீர்த்தியால் குன்றையை நேர்த்தியாய் அமைத்திட்ட
அடிகளார் தொழுத முருகா
கடைக்கண்ணின் பார்வைக்குக் காத்திங்கு நிற்கிறோம்
காட்சிதர நீ வருகவே
கனகமணி அலங்கார ரூபனே எங்களைக்
காத்திட நீ வருகவே. (5)

Koviloor Digital Library

சரவணப் பொய்கையும் சண்முக தீர்த்தமும்

தக்கதொரு மயில்தீர்த்தமும்

சக்தியின் தீர்த்தமும் பாண்டவர் தீர்த்தமும்

சங்கடம் தீர்த்து நிற்கும்

உறவெனப் போற்றிடும் உயர்செட்டி நாட்டிலே

உயர்வான மலையின் மேலே

உண்மையாய் இருக்கின்ற கடவுளே எங்களின்

உற்றதோர் குலதெய்வமே

அருணகிரி நாதரும் அருந்தமிழ் வாணரும்

அணிசெய்த குன்றை வேலா

அன்புடன் படியேறி வருவோர்க்கே அருள்செய்யும்

ஆறுமுக நீ வருகவே

ஒருமையைக் காத்திட உழைத்திட்ட அடிகளார்

உரைத்திட்ட தமிழ்கேட்கவே

உனதெழிற் பாதங்கள் கிண்கிணி ஒலித்திட

ஓடோடி நீ வருகவே. (6)

மயிலினை மலையாக்கி மலைமீது குடிகொண்ட

வடிவான எழில்வேலவா

வரம்வேண்டி வருகின்ற அன்பரின் வாட்டத்தை

மாற்றியே அருளும் முருகா

வெயில்காண முடியாமல் விளங்கிடும் சோலைகள்

மிகுதியாய்ச் சூழ்ந்திருக்க

விரைந்தோடி வருகின்ற மெய்யன்பர் உளமெலாம்

மிக்கதோர் குளிர்ச்சி யாகப்

Koviloor Digital Library

பயில்கின்ற துன்பங்கள் பறந்தோடச் செய்கின்ற
பாலகா உமையின் மைந்தா
பச்சைமயில் மீதேறிப் பாரெலாம் வலம்வந்து
பழமாகி நின்ற முருகா
அயிலொன்று கையேந்தி அரக்கரை அழித்திட்ட
ஆறுமுக மான பொருளே
அடிகளார் தமிழோசை அழகாக ஒலிக்கின்ற
அரங்கத்தில் நீ வருகவே. (7)

தீராத நோயெலாம் தீர்க்கின்ற தெய்வமே
திருக்குன்றை அமர்ந்த முருகா
திருவடியை எடுத்திங்கு திருக்கோலம் கொண்ட தமிழ்த்
தெய்வமே நீ வருகவே
ஆறாத துயரங்கள் அன்பர்க்கு வரும்போதில்
அணைக்கின்ற குமர வேளே
ஆதார மற்றவன் என்றாலும் உயிர்களின்
ஆதார மான முருகா
மாறாத பரம்பொருள் என்னவே மலைதோறும்
வளர்கின்ற கந்த வேளே
மனக்கோயில் தன்னிலே வைக்கின்ற அன்பரின்
வாட்டத்தை நீக்கும் முருகா
கூறாகச் சேவலும் மயிலுமாய்ச் சூரனைக்
கொன்றருள் செய்த குமரா
குன்றக்குடி அடிகள் கொஞ்சுதமிழ் கேட்கவே
கொலுமண்ட பம்வருகவே. (8)

Koviloor Digital Library

படியேறி வந்துனது பாதம் பணிபவரின்
பாதங்கள் நோகு மென்று
பக்தருக் காகவே கொலுமண்ட பந்தன்னில்
வந்தசண் முகநாதனே
கொடியோடு சேவலும் சுற்றிவர மயிலுமாய்க்
கொண்டு சூரனுக் கருள்வாய்
கொல்கின்ற துயரங்கள் கொன்று குவிக்கின்ற
குமரனே கார்த்தி கேயா
பிடியோடு கொடியையும் பேணித் துணைகொண்டு
பேரின்பம் தந்த முருகா
பெரும்பாவச் சுமையிலே பின்னிக் கிடப்போர்க்குப்
பேரருள் தந்த முருகா
மடியேந்தி உன்னருட் பேற்றினை வேண்டினோம்
மண்டபம் தனில்வருகவே
மன்பதை போற்றிடும் அடிகளார் வணங்கிய
வடிவேல னே வருகவே. (9)

அன்றைக்(கு) அடிகளார் அழுதகண் ணீர்கண்ட
அப்போதே மழைதந்தனை
அபிஷேகத் திற்காகத் திருமடக் கிணற்றிலே
அளவின்றி நீர்தந்தனை
குன்றையில் படியேறிக் கும்பிட்ட செந்தில்வேல்
குறைவின்றிப் பேசவைத்தாய்
கூப்பிட்ட குரலுக்குக் கோலமயில் மீதேறிக்
குறைதீர்க்கும் குமர வேளே

Koviloor Digital Library

என்றைக்கும் கண்கண்ட தெய்வமாய் இருந்திங்கே
எங்களுக் கருள் வேலவா
எழில்மேவும் முருகாஉன் நிழல்தேடி நிற்கிறோம்
எழுந்தோடி நீ வருகவே
குன்றைக்குப் பெருமையைக் குவித்திட்ட அடிகளார்
கும்பிட்ட தெய்வம் வருக
கொலுமண்ட பந்தன்னில் கொஞ்சிடும் சலங்கைகள்
குதித்தாட நீ வருகவே. (10)

தேனாறு பாய்கின்ற திருக்குன்றை நகரிலே
தேடிவரும் அன்பர் எல்லாம்
திருவடியின் நிழலிலே திளைக்கின்ற நிலையிலே
திருவருளைத் தினமும் அருள்வாய்
வானாறு கங்கையை வளர்சடையில் தேக்கியவன்
வழங்குதிருக் குமர வேளே
மாதினைப் பாகமாய் வைத்தவன் நெற்றித்தீ
வந்ததிருக் கந்த வேளே
ஊனாறும் உடம்பெனினும் உளக்கோயில் தன்னிலே
உனதாறு முகமும் வைத்தோம்
ஒருமுகமாய் அறுமுகமும் ஒளிர்கின்ற சண்முகா
உனையன்றிக் கடவு ளில்லை
தேனாறும் சொல்லினார் திருக்குன்றை அடிகளார்
திருவுளம் நின்ற முருகா
திக்கற்று நிற்கின்ற எங்களைக் காத்திடும்
தெய்வமே நீ வருகவே ! (11)



Koviloor Digital Library

விசாக நாளில் வருகைக் கவிதை
2013 - ஆம் ஆண்டு

பாண்டவர் முதலாய்ப் பலருக்கும்
பாங்காய் அருளைத் தந்தவனே !
பாவம் போக்கித் தொழுவோரின்
பவநோய் தீர்க்கும் மருத்துவனே !
வேண்டிடும் அடியார்க் கின்பங்கள்
விளைத்துக் காட்டும் வித்தகனே !
வேலும் மயிலும் துணையாக்கி
மேலாய்க் காக்கும் வேலவனே !
தூண்டும் பசியால் துடிப்போரும்
தொகையைச் சேர்த்துக் காப்போரும்
தொலைவாய் இன்றித் துணையாகத்
தோழமை காத்த தமிழ்முனிவர்
வேண்டிய தொண்டு புரிந்துவரும்
வித்தகர் பொன்னம் பலசுவாமி
விதைக்கும் சிந்தனை மண்டபத்தில்
விரைந்தே வருகை தந்திடுவாய் ! (1)

மயிலே வடிவாய்த் திகழ்கின்ற
மலையின் மீதில் அடியார்க்கு
வரங்கள் நல்கி வளமருளும்
வள்ளால் ! மலையைச் சூழ்ந்திங்கே
குயில்கள் கூவும் சோலைகளும்
கூடும் அடியார் பசியாரக்
கொடுக்கும் அன்ன சத்திரமும்
குவிந்த மலரைக் குடைந்தோசை

Koviloor Digital Library

பயிலும் வண்டின் கூட்டங்களும்

பசுமை நிறைந்த வயல்வெளியும்

பாடு பட்டே பொருள்தேடும்

பண்பார் மக்கள் வாழ்விடமும்

கயலே நிறைந்த வாவிகளும்

கவினாய்த் திகழும் குன்றக்குடிக்

கந்தா ! அழகார் மண்டபத்தில்

கருணை பொழிய நீ வருக ! (2)

மலையேற முடியாத வயதான அடியார்கள்

பலபேரும் வணங்க வேண்டி

வைகாசி விசாகத் திருநாளில் மலையிறங்கி

வந்திடுக கந்த வேளே !

விலையேறிப் போகின்ற பொருளாகச் சமயத்தை

நினைக்கின்ற பலரின் முன்னே

வேண்டிடும் ஏழைக்கும் சமயங்கள் தொண்டாற்ற

வேண்டுமென நினைத்த தந்தை

நிலைபோலத் திருமடம் காத்திடும் பொன்னம்பல

சுவாமிகள் ஆசி நல்க

நேரிதாய்க் கொலுவிருந் தாண்டிடும் மண்டபம்

தன்னிலே வருக நீயே !

கலைதேர்ந்த சான்றோர்கள் அடிகளைக் காணவே

கூடிடும் மண்ட பத்தில்

கனித்தமிழ் பருகிடக் கார்த்திகை மைந்தனே

கருணையே வருக நீயே ! (3)

Koviloor Digital Library

பேசும் தமிழை வளர்த்தவனே !
பேசாப் பிள்ளை வாய்திறந்து
பேசச் செய்த பெருங்கருணைப்
பேறே ! வள்ளி மணவாளா !
காசில் லாரும் உள்ளாரும்
கருத்தில் ஒன்றாய்க் கொண்டவராம்
கருணை நிறைந்த வெண்தாடிக்
காவி வேந்தர் தமிழ்முனிவர்
பேசும் தமிழைக் கேட்டிங்கே
பேசக் கற்றோர் நிறையப்பேர்
பேரன் பாலே கூடுகிற
பெரிய கொலுமண் டபந்தன்னில்
பாசத் தோடு வேண்டுகிறோம்
பரமன் சிறுவா நீ வருக !
வாசம் கொண்ட வெட்டிவேர்
வடிவில் வருக வருகவே ! (4)

மருது பாண்டியர் பிளவைநோய்
மாற்றித் துன்பம் நீக்கியவா !
வளமார் தென்னை மரம் சூழ்ந்து
வருவோர்க் கெல்லாம் நிழல்காட்டி
வருதுயர் நீக்கி வளம் சேர்க்கும்
மயில்மலை மீதில் இருப்பவனே !
மனிதர்க் குள்ளே வேற்றுமைகள்
மறைக்கத் தோன்றிய மாமுனியாம்
பருதிக் கதிராய்த் தோன்றியவர்
பைந்தமிழ் முழக்கம் செய்தஇடம்
பச்சைத் தமிழா நீ வருக !
பாரோர்க் கருளை நீ தருக !

Koviloor Digital Library

சுருதி போற்றும் பெருமானின்
சுடரும் நெற்றிப் பொறியாலே
தோன்றித் தேவர் துயர்தீர்த்தாய்
தொழுவார்க் கருள நீ வருக ! (5)

எண்ணங்கள் ஈடேற மலையேறி வருவோரின்
இன்னல்கள் யாவும் தீர
எழில்மேவும் மயில்மலை மீதிலே இருந்தருள்
புரிகின்ற வடிவேலனே
வண்ணமயில் வாகனா ! வண்டமிழ்க் கடவுளே !
வருகவே வருக ! வருக !
வருகின்ற அடியாரை மனமார வரவேற்று
மகிழ்ச்சியில் தோன்றும் நல்ல
எண்ணங்கள் பரிமாறி எல்லோர்க்கும் இன்சொலால்
என்றைக்கும் ஆசி தந்தே
இன்முகச் சிரிப்போடு கொலுவிருந் தருள்கூட்டும்
எங்கள்மகா சந்நி தானம்
பொன்னம்பல சுவாமிகள் புகழ்ந்தேத்தும் வேலவா
வருகவே ! வருக ! வருக !
பொருள்நிறை தமிழ்உலவும் கொலுமண்ட பத்தினில்
புண்ணியா நீ வருகவே ! (6)

குளங்கொண்ட தாமரை மலர்மீது வண்டுகள்
கூட்டமாய் வந்து மோதிக்
கொடுக்கின்ற தமிழ்ப்பண் குளிர்கின்ற செவிகளில்
குறைவின்றிக் கேட்டுக்கொண்டே
வளங்கொண்ட மயில்மலை மீதினில் தெய்வானை
வள்ளியாம் இருவ ரோடும்
வருகின்ற அடியவர் எல்லார்க்கும் வரமருளிக்
காக்கின்ற ஆறு முகனே !

Koviloor Digital Library

களங்கண்ட சூரனைப் புறங்கண்ட போதிலும்
சேவலும் மயிலு மாகக்
கருணையில் அணைத்திட்ட கடம்பனே ! கார்த்திகைப்
பெண்களின் திருமைந்தனே !
உளங்கொண்ட அடிகளார் உரைத்திடும் தமிழோசை
ஒலிக்கின்ற மண்ட பத்தில்
உன்னருள் பருகவே உனைவேண்டி அழைக்கிறோம்
ஓடோடி நீ வருகவே ! (7)

மயில்மலையின் மேலேறி வருகின்ற
அடியார்க்கு வளத்தைத் தந்தே
வாழ்விக்கும் கருணைபொழி மலர்முகங்கள்
ஆறுடைய வளமே வாராய் !
அயில்கொண்டு சூரனை அழித்திட்ட
தெய்வதமே ! அன்பின் ஊற்றாய்
அகிலத்தை ஆள்பவனே! தெய்வானை
அமர்தலைவா ! அழகின் வேந்தே !
மயல்கொண்டு வந்தாரின் மனம்மாற்றி
நற்கதிக்கு வழிகள் காட்டும்
வடிவேலே ! வண்டமிழை வளர்த்திட்ட
அடிகளார் முழங்கும் பேச்சில்
மயல்கொண்டு நிற்போர்கள் வருகின்ற
மண்டபத்தில் வருகை தாராய் !
வண்டமிழ்மா முனிவரவர் மனம்போலக்
கனிவாக வருகை தாராய் ! (8)

பன்னிரண்டு கைகளினால் பாருள்ளோர்
அனைவரையும் பாலிக் கின்ற
பச்சைமயில் வாகனனே ! பரமனருள்
அறுமுகனே வள்ளி மாதின்

Koviloor Digital Library

கண்ணிரண்டின் பார்வையிலே காதல்வலைப்
பட்டவனே ! அடியார்க் கெல்லாம்
காலமெலாம் அருள்புரியும் கருணைமிகும்
பேரழகா ! அடிக ளாரின்
எண்ணமதில் நிறைந்திருக்கும் எழில்மேவும்
திருமுருகா ! ஏழைக் காக
இரங்குகின்ற அடிகள்வாய் மலர்ந்திருக்கும்
இனியதமிழ் முழங்கு கின்ற
வண்ணமிகும் மண்டபத்தில் வளர்தமிழின்
ஒலிகேட்க வருகை தாராய் !
வாடுகின்ற உள்ளங்கள் வளமுறவே
அருள்தரவே அழகா வாவா ! (9)

படிகளில் ஏறியே பக்தியில் வருவோர்க்குப்
பயன்களை வாரி நல்கும்
பைந்தமிழ் முருகனே ! பாவையர் இருவரைப்
பக்கத்தில் கொண்ட முருகா !
செடிகளின் வாட்டத்தில் திருமுகம் வாடிடும்
தெய்வ சிகாமணிப் பேர்
குருமகா சந்நிதா னம்அரு ணாசல
தேசிகர் வழியைப் போற்றிப்
பொடிபுனை மேனியுடன் பூவுலகு போற்றவே
பொழிகின்ற மேகம் போலப்
பொங்குதமிழ் முழங்கிடும் பொன்னம்பல சுவாமிகள்
புரியுமருள் கொலுமண்டபம்
வடிவேலை ஏந்திடும் வண்ணமயில் வாகனா !
வருகைபுரிந் தெமைஆளுவாய் !
வாடிய பயிராக வணங்கியே நிற்கிறோம்
வாட்டத்தைப் போக்க வருவாய் ! (10)



Koviloor Digital Library

வைகாசி விசாகம் வருகைக் கவிதை
2014 ஆம் ஆண்டு

ஆறுபடை வீடுடையான் ஆறு பெண்கள்
அமுதூட்ட வளர்ந்தகுகன் அமர்ந்த குன்றில்
ஏறுமயில் வாகனமே இடமாய்க் கொண்டே
எல்லோர்க்கும் அருள்புரியும் கந்த வேளை
நாரெடுத்துப் பூமாலை தொடுத்தல் போலே
நல்லதமிழ்ப் பாமாலை நானும் பாடப்
பேரருளைப் பொன்னம்பல சுவாமி தந்தார்
பேரன்பன் அடிகள்தாள் தொழுகின் றேனே ! (1)

வெட்டிவேர்க் கோலத்தில் வேலா உன்னை
விழைந்திங்கே காண்பதற்கு வேண்டி நின்றோம்
துட்டனெனும் சூரனையே வதைத்த போதும்
தூயஅருள் புரிந்துமயில் சேவ லாக்கி
இட்டமுடன் வாகனமாய்க் கொடியாய் ஏற்றாய்
எங்களுக்கும் அருள்தந்தே ஏற்றுக் கொள்வாய் !
பட்டிதொட்டி எல்லாமும் தமிழால் சைவம்
பரப்பியவர் கொலுமன்றம் பறந்தே வாராய் ! (2)

மயிலுக்கு முத்தியினை வழங்கிக் காத்தாய்
மருதுவுக்குப் பிளவைநோய் மாற்றிக் காத்தாய்
செயலிழந்த பிள்ளையினைப் பேசச் செய்தாய்
செந்தமிழ்மா முனிவரவர் சிந்தை நின்றாய்
புயல்சுமந்த குன்றினிலோர் பொருளாய் வந்தாய்
புண்ணியம்செய் தேவரினைக் காத்தாய்; வள்ளி
மயலினிலே திளைத்தாலும் அடியார் தம்மை
மறக்காத சண்முகனே வருகை தாராய் ! (3)

Koviloor Digital Library

பிள்ளையிலா அடியவர்கள் வேண்டி நின்றால்
பேரன்பால் உன்நினைவால் விரதம் கொண்டால்
அள்ளிஅள்ளிக் கொடுப்பவனே அழகா கந்தா
அருள்வழங்கும் வேலவனே! தெய்வ யானை
வள்ளியுடன் குன்றக்குடி காக்கும் வள்ளால் !
வண்டமிழர் அடியார்கள் வரிசை நின்றார்
துள்ளிவரும் வேலேந்தித் தோகை ஏறித்
தொண்டருக்கே அருள்புரிய வருகை தாராய் ! (4)

அகத்தியனாம் மாமுனிக்கே அருளைச் செய்த
ஆறுமுகா உனதடிகள் பணிந்து நின்றோம்
திகட்டுவதே இல்லையப்பா உன்றன் தோற்றம்
தேம்பியழும் குழந்தைகளாய் ஏங்கும் எங்கள்
அகத்திருளை நீக்கிடவே அழகா வாராய்
அரியதமிழ் மாமுனிவர், இளைய சாமி
மகத்துவத்தில் பொலிவுபெறும் மண்ட பத்தில்
வண்டமிழின் நாயகனே வருகை தாராய் ! (5)

தமிழ்வழியில் படிப்பதற்குத் தடைகள் செய்தார்
தமிழினையே படிப்பதற்கும் தடைகள் கேட்டார்
தமிழ்வளர்த்த எழில்முருகா தமிழைக் காக்கத்
தவிக்கின்றோம் நீவந்து காக்க வேண்டும்;
அமிழ்தனைய தமிழ்முழங்கி அடியார்க் கெல்லாம்
அருள்தந்த ஞானமுனி சொல்லின் வாசம்
கமழ்கின்ற மண்டபத்தில் கருணை சேர்த்துக்
கந்தாநீ எமக்கருள வருகை தாராய் ! (6)

Koviloor Digital Library

குன்றில்உயர் குன்றாகத் திகழும் இந்தக்
குன்றக்குடி மலையமர்ந்த குமரா ! நல்ல
மன்றத்தில் எழுந்தருளி வருகை தாராய்
மனங்குளிர அடியார்க்கு வரங்கள் தாராய்
அன்றந்த நான்முகற்கு ஞானம் தந்தாய்
அப்பனுக்கும் குருவாகி அறிவு தந்தாய்
இன்றிங்கே நீரின்றி ஏங்கும் மக்கள்
இன்னலினைத் தீர்த்திடவே மழையைத் தாராய் ! (7)

மைந்தனெனச் சிவபெருமான் நெற்றிக் கண்ணில்
வந்துதித்த அறுமுகனே ! அடியார் தம்மைச்
சொந்தமெனக் கொண்டவனே ! வள்ளி மாதைத்
துணையாகக் கொண்டதனால் புதுமைக் காதல்
செந்தமிழ்க்குத் தந்தவனே ! சாதி பேதம்
சிதைத்தவனே ! செந்தமிழர் தேவே ! நாட்டில்
கொந்தளிக்கும் வன்முறைகள் கொலைகள் கொள்ளை
கூடாமல் காத்தருள வருகை தாராய் ! (8)

என்பணிந்த சிவபெருமான் நெற்றிக் கண்ணில்
எரிநெருப்பாய் வந்தவனே ! உமையாள் கையின்
அன்பணைப்பால் ஆறுருவம் ஒன்றே யாகி
அருள்வடிவாய் நின்றவனே தேவர் கொண்ட
துன்பமெலாம் நீக்கியவா தெய்வ யானை
துணையான சண்முகனே வள்ளி தோழா !
அன்பர்களின் மனமிருக்கும் அடிக ளாரின்
அமுதத்தமிழ் நிறைந்திருக்கும் அரங்கில் வா வா ! (9)

Koviloor Digital Library

அருள்நெறித் தந்தையின் அருந்தமிழ் கேட்டிடும்
அரங்கினில் நீவருகவே
அன்பர்க்கே அருள்செய அவர்கொலு வீற்றருள்
மண்டபம் நீவருகவே
மருள்தரும் சமுதாயச் சிக்கல்கள் மறைந்திட
மாநிலம் சிறந்தோங்கவே
மகத்தான தொண்டுகள் மாந்தர்க்குச் செய்திட்ட
மாமுனி வழிதன்னிலே
குறள்நெறி பரப்பியே கோடானு கோடியாய்க்
குவிந்திடும் அன்பரிடையே
குன்றக்குடி மலையமர் குமரனே உனைமனம்
மறவாமல் வணங்கிநின்றோம்
அறநெறி தேக்கிடும் பொன்னம்பல அடிகளார்
அன்றாடம் தொண்டர்வாழ்வில்
அருள்விளக் கேற்றிடும் அரங்கினில் அறுமுகா
வேலவா வருக ! வருக ! (10)



Koviloor Digital Library

வைகாசி விசாகம் வருகைக் கவிதை
2017 ஆம் ஆண்டு

வெட்டிவேர்க் கோலத்தில் அடியவர்க் காகவே
மேல்நின்று வருகை தாராய் !
வேலினை ஏந்திய வள்ளிமண வாளனே !
மேன்மைகொள் தெய்வயானை
கட்டிய கந்தனே ! கடம்பனை வென்றவா !
கார்த்திகைப் பாலுண்டவா !
கருணைசெய் முகங்களில் கண்ணிரண் டாறினில்
காட்சியில் எழில் கொண்ட வா !
செட்டி எனும்பெயர் சிறந்தோங்கும் வேலவா !
செய்யதமிழ் காக்கும் முருகா !
சேர்ந்திங்குக் கூடிய தமிழரின் சிரமங்கள்
சீக்கிரம் தீர்க்க வருக !
வெட்டிடும் இடிமின்னல் மேகமாய் முழங்கிடும்
மேலான தமிழ்மா முனி
வீற்றருள் செய்திட்ட கொலுமண்ட பத்திலே
விரைந்துநீ வருகை தாராய் ! (1)

மலையினில் இருந்து மனிதரைக் காக்கும்
வள்ளிதெய் வானை கணவா
அலைநிறை செந்தூர் அமர்ந்திடும் வேலா
அரக்கனுக் கருள்செய்த வா !
கலைவளர் குன்றக் குடியமர் அடிகள்
கனித்தமிழ் பேசும் அரங்கில்
அலையெனத் திரண்ட அடியவர் தமக்கே
அருள்தர நீ ஓடிவா ! (2)

Koviloor Digital Library

ஓயாமல் பேசியே ஓய்வினில் இருப்பவர்

உழைப்பினில் உயர்ந்த நாடு

காயாமல் காய்கிற கதிரவன் வரவினால்

களிப்புறும் தமிழர்நாடு

வீயாமல் காத்திட வேண்டினோம் தோகைமயில்

மீதேறி நீ வருகவே!

சாயாத தமிழோசை சமுதாய மாமுனி

தரும் மண்ட பம் வருகவே ! (3)

மதுவுக்குத் தடையிலை மாட்டுக்குத் தடையென

மயக்குகின்றார் பலரே !

புதுவர வாகவே புவியினை ஆண்டிடப்

போட்டிகள் போடுகின்றார் !

எதுபுவி அரசியல் இயல்பென அறியாமல்

எல்லோரும் ஆசைகொண்டார் !

நதியினைச் சடைதாங்கும் நடராசன் பெற்றவா

நாடாள நீ ஓடிவா ! (4)

குற்றமே புரிந்தவர் கொலைகளைச் செய்தவர்

கூட்டமாய்க் கூடு கின்றார்

பெற்றதாய் தந்தைக்கும் பேணிய மனைவிக்கும்

பெருந்துயர் செய்கி றார்கள்

கற்றவர் கல்லாதார் எனும்பேதம் இல்லாமல்

காலடி வீழு கின்றார்

நற்செயல் இன்றியே நலிந்தோரை மிரட்டியே

நாடகம் ஆடுகின்றார் ! (5)

Koviloor Digital Library

வஞ்சக மாகவே வடமொழி திணித்திட
வாய்ப்பினைப் பார்த்து நின்றார்
தஞ்சமாய்க் கிடந்தே தமைக்காத்துக் கொள்ளவே
தணியாத ஆசை கொண்டார்
பஞ்சமே வந்தாலும் பாராமல் பதவிக்குப்
பட்டாக்கள் போடு கின்றார் !
கொஞ்சிடும் வள்ளியின் கொழுநனே ! வேகமாய்க்
கொடுமைகள் தீர்க்க வாவா ! (6)

வாளேந்து வோரெலாம் வீரர்கள் இல்லையே
வாள்வீசத் தெரியவேண்டும்
வாய்ப்பேச்சுப் பேசுவோர் எல்லோரும் மக்களின்
வளத்திற்குப் பேச வேண்டும்
கோலேந்தும் ஆட்சியின் கொலுவீற் றிருப்போர்கள்
குடிமக்கள் பேண வேண்டும்
குடிமகன் பெருகிடக் கோடிகள் நிறைத்திடக்
குடியரசாட்சி என்றார் !
வேலேந்திச் சூரனை வென்றவா எங்களின்
வேதனை நீ தீர்க்க வா !
வீதிகள் எல்லாமும் சாராயம் விற்கின்ற
விசித்திரம் நீ மாற்ற வா !
மாலேந்து மருகனே முருகனே தமிழ்நாட்டு
மக்களின் குறைதீர்க்க வா !
மக்களுக் காகவே மதம் என்று முழங்கிய
மண்டபம் நோக்கி நீ வா ! (7)

Koviloor Digital Library

மேயாத மானினை வேட்டையில் வென்ற வா
விதிமீறல் உனக்கில்லையா ?
விடைமீது வருபவன் விழித்தீயில் வந்ததால்
விடுதலை ஆதல்முறையா ?
வாயாரப் பாடியே வாழ்த்தினால் வாழ்க்கையில்
வளத்தினைப் பெறலாகுமோ ?
மௌனமே காத்திங்கு வழிபட்டு நிற்பதால்
மானத்தை இழக்கலாமோ ?
தாய்கூடப் பசித்துன்பம் தாங்காமல் பிள்ளையின்
தலைகொய்யும் நிலைகள் ஏனோ ?
தணியாத கொலைகொள்ளை தறிகெட்ட யானைபோல்
தமிழ்நாட்டில் நிறைந்த தேனோ ?
சேயாக நின்றிங்கு திருப்பாதம் காணவே
திருக்கூட்டம் கூடிநின்றோம் !
திங்களைச் சூடியோன் மைந்தனே தீங்குகள்
தீர்த்தெமைக் குளிர்விக்க வா ! (8)

நாவுக்குச் சுவையாக நல்லுண வின்றியே
நாள்தோறும் வாடு கின்றார்
பூவுக்குள் தேனுண்டு புலம்பிடும் வண்டுபோல்
போதையில் ஆடுகின்றார்
தேவுக்குள் வேற்றுமை செய்வோரின் தீங்கினைத்
தீர்க்கவும் நினைக்கவில்லை !
ஆவிக்கு நிகரான மக்களைக் காப்பாற்ற
அரசாங்கம் முயலவில்லை !

Koviloor Digital Library

சேவலைக் கொடியாகக் கொண்டவா எங்களின்
தீராத துயர்தீர்க்க வா !
ஆவுக்கும் காளைக்கும் அணிசெய்ய வேண்டினோம்
அதற்குநீ உதவ வருவாய் !
நாவுக்கு வேந்தரின் நற்றமிழ் முழங்கிய
நன்மண்ட பம்வருகவே !
காவிக்குள் சமத்துவம் கண்டவர் முழங்கிய
கவின்மண்ட பம்வருகவே ! (9)

கொடுமைகள் செய்தவன் என்பதால் சூரனைக்
கொல்லவே வேலேந்தினாய்
கொலைகளும் கொள்ளையும் நிறைகின்ற நாட்டினில்
குறையேதும் தெரியவில்லையா !
மடமைகள் ஒழிந்திட மணிக்குரல் எழுப்பிய
மாமுனி வாழ்ந்த காலம்
மகத்துவம் நிறைந்தவர் மாநிலம் ஆண்டனர்
மக்களின் குறைதீர்த்தனர் !
உடமைக்குக் காவல் இங்கில்லை எனும்காலம்
உருவாகக் கவலை கொண்டோம்
உணவினைத் தருகிற விவசாயி உயர்ந்திட
ஓர்வழி நீ சொல்ல வா !
குடியாட்சி பேசுவோர் குழப்பங்கள் செய்கிறார்
குரலோங்கிப் பேசுகின்றார்
குற்றங்கள் குறையவும் கொஞ்சுதமிழ் வாழவும்
குமரா நீ ஓடிவருவாய் ! (10)

Koviloor Digital Library

மொழியைக் காக்க முயல்வோரை
முறையில் லாமல் திட்டுகிறார் :
முழந்தாள் மண்டி இடுவோரை
முதுகில் சுமந்து திரிகின்றார்;
அழிந்து விட்ட(து) எனச் சொல்லி
அதற்குள் நுழையப் பார்க்கின்றார்;
அழியப் போகு(து) எனச்சொல்லி
அழித்துப் பார்க்க நினைக்கின்றார்;
அழித்த இடத்தில் அயல்மொழியை
அச்சுப் பதிக்க முயல்கின்றார்;
அழிக்க நினைத்தோர் அழிவார்கள்
அரக்கன் வழியே உணர்த்தியவா !
மொழிக்குத் தலைவா நீ வளர்த்த
மொழியைக் காக்க வந்திடுவாய் !
மொழியை மதத்தைக் காத்த தமிழ்
முனிவர் முழங்கிய இடம்வாராய் ! (11)



Koviloor Digital Library

விசாகக் கவிதை – 2016

எனைவளர்த்த மடமிதுதான் இருந்த போதும்
ஏதோவோர் அந்நியன்போல் இருக்கின் றேன்நான்
முனைவனில்லை என்பதனால் வழியைச் சில்லோர்
மூடிவிட்டார் எனநினைத்த போதில் சுவாமி
மனம்நினைத்த காரணத்தால் விசாகம் தன்னில்
வருகைக்குக் கவிபாட வாய்ப்புத் தந்தார்;
அனையாக இருந்தென்னைக் காத்த சுவாமி
அடிமலர்கள் வணங்கிநான் கவிதை சொல்வேன். (1)

பசித்துயரைத் தங்களுக்குப் பயனாய் மாற்றிப்
பதவிக்குப் போட்டியிடும் இந்த நாட்டில்
வசித்துவரும் எல்லோரும் வளமாய் வாழ்ந்தால்
வளர்ந்துவிடும் பொருளுடைமை ; அரசு போகம்
ருசித்தவரின் வார்த்தைகளில் மயங்கி; பாதம்
துதிக்கின்ற நிலைகொண்டார்; குறத்தி சொல்லை
ரசித்தவனே ! தனிமனித வணக்கம் தன்னை
நசுக்கியுனை வணங்குதற்கு வழிகள் சொல்வாய். (2)

எழுகின்ற கதிரவனை மறைக்க எண்ணி
எத்தனைபேர் முயன்றாலும் முடியா தன்றோ?
பழுதெண்ணிக் கூடியவர் பாழாய்ப் போனார்?
பரமசிவன் பெற்றவனே! சூரன் தன்னை
விழவைத்த பேரருளே! தமிழர் நாட்டில்
விதையாகித் தோன்றிவினை வளர்க்கும் கூட்டம்
அழவைத்த ஆறுமுகா ஆறு பெண்டிர்
அமுதூட்ட வளர்ந்தவனே அரங்கம் வாராய் ! (3)

Koviloor Digital Library

சுலபமாய்ப் பழம்பெற்றால் சுவைக்கா தென்று
    சுற்றிவந்து நின்றதனால் உழைப்பின் மேன்மை
உலகினர்க்கே உணர்த்தியவா; உனக்காய் இங்கே
    உள்ளன்புப் பொருள்தந்து காத்து நின்றோம்;
இலவசத்தை எதிர்பார்த்து வரிசை நிற்கும்
    ஏழைகளின் கூட்டம்போல் இங்கே நின்றோம்
பலகாலம் தள்ளாமல் உடனே வந்து
    பக்தர்களின் குறைதீர்க்க வேண்டும் பாலா ! (4)

சாதியினை மறுத்தவனே! உன்றன் பாதம்
    சரணென்று வீழ்பவர்கள் சாதிப் பற்றால்
மோதிக்கொண் டழிவுத்தீ மூட்டு கின்றார்
    முன்னேற்றம் காண்கின்ற காலந் தன்னில்
வீதியிலே வீட்டினிலே வேறு பாட்டை
    விதைக்கின்றார்; அவர்செயலால் வாழ்க்கை இன்றி
நாதியின்றித் திரிகின்றார் பலபேர், நாட்டில்
    நல்லவழி காட்டிடவே நயந்து வாராய் ! (5)

வந்தாரை வாழ்விக்கும் தமிழர் நாட்டில்
    வாழ்வாரை வாழவைக்க வருவாய் கந்தா !
செந்தமிழ்க்குத் தொண்டாற்றிச் சிறந்தார் தம்மைச்
    சிறப்பிக்க வந்திடுவாய் ! அடிகள் தம்மைச்
சொந்தமெனக் கொண்டாடும் நாங்கள் இங்கே
    சூழ்ந்திருந்து வேண்டுகிறோம் ! உடனே வாராய் !
சிந்தனையில் உன்நினைவே சேர்ந்து நின்றோம்
    சிவன்மகனே சீக்கிரமாய் வருவாய் அப்பா ! (6)

Koviloor Digital Library

கருணைநிதி நீயென்று கருதி நின்றோம் !
கவின்குறத்தி மணவாளா ! கவலை நீக்கும்
அருள்நிதியும் நீயென்றே அன்பு கொண்டோம் !
அறுமுகனே அடிகளார் அழைக்கின் றார்கள் !
உருகிவரும் உள்ளத்தால் உணர்ந்து கொண்டோம்!
உனைத்தவிர எங்களுக்குத் துணையே இல்லை !
அருகிருந்தே உனைக்காண ஆசை கொண்ட
அன்பர்க்கே அருள்புரிய அழகா வாராய் ! (7)

குன்றமர்ந்த பெருமானே குறத்தி நண்பா !
கும்பிடுவோர் குலம்காக்கும் முருகா ! நல்ல
மன்றமர்ந்த அடியார்கள் வணங்கி நின்றோம்
வள்ளிமண வாளனே வருகை தாராய் !
இன்றல்ல நேற்றல்ல என்றும் உன்றன்
இணையடிகள் போற்றுகிற எங்கள் சுவாமி
முன்றிலிலே காத்திருந்து வரவேற் கின்றார் !
முழுமுதலே அறுமுகனே முந்தி வாராய் ! (8)

வென்றவர்கள் தோற்றவர்கள் வேறு பாடு
மிகப்பெரிய அளவில்லை என்ற போதும்
நின்றவர்கள் பலபேரின் நிலைமை இப்போ
நினைப்பதற்கும் முடியவில்லை; ஆட்சிக் கட்டில்
என்றனுக்கே என்றனுக்கே என்று பேசி
இருந்தஇடம் தெரியாமல் எங்கோ போனார் ?
உன்றனையே தமிழ்த்தெய்வம் என்று போற்றி
உழைத்தவர்கள் நலம்காக்க வருவாய் ஓடி ! (9)



Koviloor Digital Library

விசாகக் கவிதை – 2018

எந்நாளும் தமிழ்முழங்கும் ஏற்றமிகும் மண்டபத்தில்
இந்நாளில் முருகனையே எதிர்கொண்டு வரவேற்று
மின்னார்செஞ் சடையான்போல் வீற்றிருந்தே அருள்புரியும்
பொன்னம் பலசுவாமி பொன்னடிகள் வணங்குகிறேன். (1)

குன்றமர்ந்த பெருமானே குறத்தி வள்ளி
கூடியவா, தெய்வானை கொஞ்சும் வேலா
இன்றுனது பிறந்தநாள் விசாகம் என்றே
எல்லோரும் வரவேற்கக் காத்து நின்றோம்
என்றுமுள தமிழோடு சமயம் தன்னை
ஏற்றமுறச் செய்ததமிழ் முனிவர் பேசும்
மன்றினிலே எழுந்தருள வாராய் ! எங்கள்
மனமமர்ந்த ஆறுமுகா வருகை தாராய் ! (2)

சமயத்தைச் சமுதாயம் தன்னைக் காக்கச்
சளைக்காமல் உழைத்தபெரும் ஞானி எங்கள்
தமிழ்முனிவர் அருள்காட்டும் மண்ட பத்தில்
தக்கதொரு வாரிசெனப் புகழைச் சேர்க்கும்
அமுதமொழித் தமிழாலே அயர்வே இன்றி
அனுதினமும் பாடுபடும் அடிக ளோடு
குமுதமலர் எனநிறைந்தோம் கூடி நின்றோம்
கும்பிட்டு வேண்டுகிறோம் வருகை தாராய் ! (3)

ஆறுமுகக் கோலத்தில் அழகாய் நின்றாய்
அருள்பொழியும் நிலையாலே அன்பாய் நின்றாய்
கூறுபடச் சூரனையே வதைத்தாய் செந்தில்
குடிகொண்ட வேலவனே பெட்ரோல் டீசல்

Koviloor Digital Library

ஏறுமுகம் ஆவதனைத் தடுக்க வாராய் !

எழில்தோகை மயிலேறும் முருகா நெற்றி

நீறுடனே நிற்கின்ற எம்மைக் காக்க

நீலமயில் வாகனனே வருகை தாராய் ! (4)

பணம்படைத்தோர் தமக்குத்தான் உலகம் என்றால்

பலம்படைத்தோர் தமக்குத்தான் அரசும் என்றால்

தினம் உழைத்து வாழ்வோர்தாம் எங்குப் போவார் !

திருச்செந்தூர் தனில்அரசு செலுத்தும் வேலா !

மனமுலைந்து தமைக்காக்க மயங்கி நிற்கும்

மக்களையார் காப்பதிங்கே? காக்க வாராய் !

நினைவெல்லாம் மக்களையே சிந்திக் கின்ற

நேசமுள்ள அடிகளார் அழைத்தார் வாராய் ! (5)

இலக்கணத்தை அகத்தியர்க்கே எடுத்துச் சொன்னாய்

ஏன்அவரைக் குடகுக்குப் போகச் சொன்னாய் ?

தலைகவிழக் காக்கையினால் தள்ளப் பட்ட

தண்ணீரே காவிரியாய் நடக்கச் செய்தாய் !

மலையரசி உதகையிலே ஆறு தோன்றி

வளம்பெருகச் செய்திருக்க லாமே! அன்று

தலைநிமிர்ந்த தமிழரெலாம் தண்ணீர்க் காகத்

தடுமாறி நிற்கின்றார் காக்க வாராய் ! (6)

கமண்டலத்தைத் தள்ளிவிட்ட உன்றன் அண்ணன்

கணபதிதான் மேட்டூரில் கவிழ்த்தி ருந்தால்

தமிழகத்தில் காவிரிதான் தடைகள் இன்றித்

தண்ணீரின் பெருக்கோடு தஞ்சை மண்ணில்

Koviloor Digital Library

நிமிர்ந்திருக்கும் நெல்வயல்கள் நிறைந்தி ருக்கும்
நெடுவாசல் கொடுமையெலாம் நேரா தன்றோ
தமிழிருக்கும் பூமியிலே பிறரை வேண்டித்
தாழ்ந்திருக்கும் நிலைதன்னை மாற்ற வாராய் ! (7)

தேவர்களைக் காப்பதற்குச் சூரன் தன்னைத்
தேடிவந்தே அழித்தவனே ! மக்கள் வாழத்
தேவையில்லா ஆலைகளைத் திறந்து வைத்தார்
தெய்வானை மணவாளா காக்க வாராய் !
பாவமென வாக்களித்துப் பதவி தந்த
பாமரரைச் சுடுவதற்கா படைகள் தந்தார் ?
ஏவிவிட்ட அதிகாரம் தெரிய வில்லை
ஏனென்று கேட்பதற்கே வருகை தாராய் ! (8)

காவிரியில் நீரில்லை; கஞ்சி காய்ச்சக்
கழனியிலும் விளைவில்லை ஹைட்ரோ கார்பன்
மேவிவரும் தொல்லையினால் மேன்மை இல்லை
மேலிருந்து பார்ப்பவனே ! துயரம் தீர்க்கத்
தாவிரும் மயிலேறி வருகை தாராய் !
தணியாத துயரங்கள் தமிழ கத்தில்
பாவாமல் காத்தருள விரைந்து வாராய் !
பரமனருள் ஆறுமுகா பறந்து வாராய் ! (9)

கலவரங்கள் நடக்கின்ற போதும் கூடக்
கருணையுடன் சென்றங்கே அமைதி காத்தார்
உலகுபுகழ் அருள்தந்தை எங்கள் சாமி
உளமுருக வணங்குகிற முருகா வாராய் !

Koviloor Digital Library

அலைகடலின் ஓரத்தில் திரண்ட மக்கள்
அழுதரற்றும் நிலைமாற அருளைத் தாராய் !
மலைமகளின் அரும்புதல்வா இரண்டு மங்கை
மணவாளா மண்மகளைக் காக்க வாராய் ! (10)

ஆவினது கண்ணீரைத் துடைத்த மன்னர்
ஆண்டிருந்த தமிழ்நாட்டில் அலறும் மக்கள்
கூவியழும் குரலோசை கேட்கா வண்ணம்
குண்டுவைத்துச் சுடுகின்ற ஓசை கேட்டோம்;
ஈவிரக்கம் இல்லாமல் எளியோர் வாழ்க்கை
இரையாக்கப் படுகிறதே பணத்திற் காக !
காவிக்குள் கருணைநிறை அடிக ளாரின்
கனிவுள்ளம் போலெம்மைக் காக்க வாராய் ! (11)

தமிழ்க்கடவுள் நீயென்றார் ! தமிழர் நாட்டில்
தமிழ்வழியில் கற்பதற்கு வழிகள் காட்டு !
நிமிர்ந்திருந்த தமிழகத்தை நீட்டின் பேரால்
நிலைகுலையச் செய்கின்ற நிலைமை மாற்று !
இமிழ்கடல்சூழ் உலகெல்லாம் ஏற்றம் தந்த
இன்தமிழைக் காப்பதற்கு வருகை தாராய் !
அமிழ்தமெனத் தமிழ்போற்றும் மக்கள் வாழ்வின்
அவலநிலை நீக்கிடவே அழகா வாராய் ! (12)



Koviloor Digital Library

2019 வைகாசி விசாகம் – வருகைக் கவிதை

வளர்ந்திட்ட மண்ட பத்தில்
வருகின்ற முருகன் தன்னை
வரவேற்றுக் கவிதை பாட
வாய்ப்பினைத் தந்த சாமி
குருமகா சந்நிதா னத்தின்
பொற்பாதம் வணங்கு கின்றேன்
முருகனை வரவேற் கின்றேன்
முத்தமிழ்த் துணையே வா ! வா ! (1)

காக்கின்ற கடவுளின் மருகனே உமைதந்த
கனகவேல் ஏந்தும் முருகா !
கானகக் குறத்தியும் கன்னிதெய் வானையும்
கல்யாணம் செய்தகுமரா !
வாக்கினில் தமிழையும் மனதினில் சைவமும்
வளர்த்திட்ட அடிகளாரின்
வழியிலே மண்டபம் தன்னிலே தமிழ்ப்பேச்சின்
வல்லமை கொண்டசாமி
நோக்கியே நிற்கிறார்; தொண்டர்கள் சூழவே
தோகைமயில் மீதேறிவா !
நுதல்விழி கொண்டவன் நுண்பொருள் அறிந்திட
நுவன்றவா நொடியினில்வா !
நாக்கினில் உன்பெயர் நவின்றிடும் அடியார்கள்
நலம்காக்க நீஓடிவா!
நல்லவர் வாழ்ந்திட அல்லவர் வீழ்ந்திட
நாயகா வேலேந்திவா ! (2)

குடித்திட நீரில்லை என்றாலும் குடிமகன்
குடித்திடக் கடைகள்கண்டார்
கூட்டணி வைத்திங்கு கொடிகட்டி நிற்கிறார்
கோட்டையை எண்ணிநின்றார்

Koviloor Digital Library

துடித்திடக் கொலைகளும் கொள்ளையும் நிறைந்தாலும்
குற்றங்கள் இல்லையென்றே
குரலோங்கிச் சொல்கிறார்; குழந்தைகள் பிஞ்சுகள்
கொடுமையில் உழலுகின்றார்;
நடித்திடும் அரசியல் நாடகக் காட்சியில்
நம்பிக்கை கொண்டமக்கள்
நலமாக வாழஓர் வழிகாட்ட வள்ளியின்
நாதனே நீவருகவே!
இடித்திடும் மழைமேகம் காணவே ஆடிடும்
எழில்மயில் மீதேறிவா!
இருக்கின்ற உயிர்களாம் பயிர்களை வளர்த்திட
இறங்கிநீ இங்குவா வா! (3)

மரங்களை வெட்டியே வறட்சியைத் தந்தவர்
மழைக்காக யாகம் செய்தார்;
மழலைகள் சிறுமிகள் எனமனம் பாராமல்
மாபெரும் கொடுமை இங்கே !
உரங்களைப் போட்டிங்கு விவசாயம் செய்தவர்
உணவின்றி வாடுகின்றார்
உழைப்பவர் வறுமையை நீக்கவே உயரத்தில்
அமர்ந்தவா நீவருகவே !
கரங்கள்ஓர் பன்னிரண் டானாலும் சிறிதேனும்
கறையில்லாக் கந்தவேளே !
கையொன்று காட்டியே கவலைகள் தீர்த்திடக்
கஜமுகன் தம்பியேவா!
நிறங்களைப் பார்த்தவர் மனங்களைப் பாராமல்
நித்தமும் சண்டையிட்டார்
நிம்மதி நாட்டிலே நிறைந்திட நீலமயில்
வாகனா நீவருகவே ! (4)

Koviloor Digital Library

பன்னிரு கைகளைக் கொண்டவா பாரத
நாட்டினைக் காக்கநீவா!
பழனியில் இருந்தாலும் பன்னீரில் குளித்தாலும்
பாட்டாளி நலம் காக்கவா!
செந்நிறச் சூரியன் திசைநோக்கி நிற்கிறோம்
சிறந்ததோர் விடியலைத்தா!
செந்தமிழ் வளர்த்தவா! சிறுகுற வள்ளியின்
தேன்சொல்லில் மனம் தந்தவா!
பொன்னிற வேலினைக் கையினில் கொண்டவா
புலம்பிடும் ஏழைவாழ்வில்
பொருள்சேர வைக்கவும் புத்தொளி சேரவும்
புறப்பட்டு நீ வருகவே!
கண்ணிலே வழிகின்ற ஏழையின் கண்ணீரைக்
கையினால் துடைக்க நீவா!
காசின்றித் தவிப்போர்க்குக் காசினை அளிக்கவா!
காசினி காக்க வாவா ! (5)

கொள்ளைகளும் கொலைகளுமாய்க் குவியல் ஆச்சு !
குழந்தைகளை விற்கின்ற கொடுமை ஆச்சு;
பள்ளிசென்று வருவதற்குள் பதைத்தே நிற்கும்
பாசத்தால் பெற்றோர்கள் கலங்க லாச்சு;
பொள்ளாச்சி சம்பவங்கள் பெருக லாச்சு;
புயலாலே வீடிழந்து புலம்பல் ஆச்சு
எள்ளளவும் தீங்கில்லை அமைதிப் பூங்கா
என்போர்க்கு எடுத்துரைக்க ஓடி வாராய் ! (6)

மூக்குத்தி தோடெல்லாம் கழற்ற லாச்சு
மூச்சிரைக்கப் படித்ததெல்லாம் மறக்க லாச்சு
வாக்குறுதி தந்ததெலாம் மறந்து போச்சு
மருத்துவக் கனவுக்குத் தூக்கம் போச்சு

Koviloor Digital Library

போக்கற்றுத் தவிக்கின்ற நிலையும் ஆச்சு
புதுமொழியைத் திணிக்கின்ற வழியும் ஆச்சு
கேட்கின்ற நிலையின்றி அடிமை வாழ்வைக்
கேவலமாய் நடத்துகின்ற முறையும் ஆச்சு. (7)

எவரெவரோ தமிழ்நாட்டை ஆண்ட காலம்
இங்கிருப்போர் அறியாரா இனத்தைப் பற்றி:
சுவரிருக்கும் ஓவியங்கள் உயிர்கொண் டாற்போல்
சுயஉணர்வு பெற்றிடவே உழைத்த பேரைத்
தவறிழைத்த பேராகக் காட்டு கின்றார்
தமிழரில்லை என்றிங்கே ஏசு கின்றார்;
(புவிபோற்றும் தமிழ்க்கடவுள் நீதான் ஐயா!
பொல்லாங்கு சொல்வோர்க்குப் புரிய வைப்பாய் !)
அவரவரும் பதவிக்கே ஆசைப் பட்டார்
அதனாலே முழங்குகிறார் மேடை ஏறி ! (8)

உலகத்தைப் பழத்துக்காய்ச் சுற்றி வந்தாய்
ஒருபயனும் இல்லாமல் ஆண்டி யானாய்
கலகத்தைச் செய்தவன்மேல் கருணை காட்டி
கனகமயில் சேவலென ஏற்றுக் கொண்டாய்
பழகுதமிழ் வளர்த்தவனே பள்ளி தோறும்
பைந்தமிழைப் பயிற்றுவிக்க வழியைக் காட்டு;
அழகுதமிழ் ஒழிப்பதற்கே ஆசை கொண்டார்
அந்நியர்கள் அவர்களுக்குன் வேலைக் காட்டு; (9)

நிலமின்றி நீரின்றி வாடும் மக்கள்
நிலையுயர வழியில்லை நேர்மை கொண்ட
நலமான மனிதர்இந்த நாட்டில் இல்லை
நல்லவரால் தானிங்கே மழையும் பெய்யும்;
குலம்சாதி மதம்போற்றும் கொள்கை நீக்கிக்
குறத்தியினை மணந்தவனே: இந்த நாட்டில்
உலவுகின்ற பகைப்பேயை விரட்ட வாராய் !
உள்ளன்பால் ஏங்குகிறோம் விரைந்து வாராய் ! (10)

Koviloor Digital Library

அருளோடும் அன்போடும் தமிழர் வாழ
அரும்பாடு பட்டுழைத்த ஞானத் தந்தை
பொருளார்ந்த புகழார்ந்த பொழிவைச் செய்யும்
பொலிவான மண்டபத்தில் வருகை தாராய்
கருவாகி வரும்போதே கல்விக் காகக்
கால்கடுக்க நிற்கின்ற கவலை தீர்ப்பாய் !
குருவாக நின்றவனே குமரா உன்றன்
குரல்கேட்க நிற்கின்றோம் வருகை தாராய் ! (11)

கையாலே யாமிருக்கப் பயமேன் என்று
கருணைபொழி முகம்காட்டும் கந்த வேளே !
கையிருக்கும் வேலாலே தேவர் தம்மைக்
காப்பதற்குச் சூரனையே அழித்த வேலா !
செய்யிருக்கும் வயலெல்லாம் வீடாய்ப் போச்சு;
சேர்ந்திருக்கும் நீர்நிலைகள் வறண்டு போச்சு;
பொய்யிருக்கும் அரசியலைப் போக்கி நல்ல
புதுவுலகம் உன்கையால் படைக்க வாராய் ! (12)

ஒருமூன்று கண்ணுடையான் மகனாய் வந்தாய்
உமையம்மை கைகளினால் ஒருவன் ஆனாய்
இருமூன்று முகம்கொண்ட வேலா இந்த
இருபத்து மூன்றினில்நல் வழியைப் காட்டு;
பெருமூன்று உலகத்தும் பெருமை மிக்கோய்
பேரன்பால் பேரறிவால் அடிகள் பேசும்
அரும்மூன்று தமிழ்கேட்கும் மண்ட பத்தில்
அழகாநீ அருளோடு வருகை தாராய் ! (13)



Koviloor Digital Library

நீடு வாழ்வாரே !
40ஆம் ஆண்டு கந்தர் சஷ்டி
சிறப்பு மலரில் இடம் பெற்றது

நலம்பெற மக்கள் நாடிடும் தேவன்
நங்கை குறவள்ளி அன்பன்
உளம்நிறை அன்பால் உண்மையைக் கலந்தே
உருகிடும் அடியாரின் தெய்வம்
தலம்என அறுபடை வீடுடைக் கந்தன்
தளர்பவர்த் தாங்கிடும் வேலன்
நிலமளந் தானின் மருகனின் தாளை
நித்தமும் நினைத்திடு வோமே!

நஞ்சினை உண்ட நஞ்சிவன் மைந்தன்
நம்மையே காத்திடும் நண்பன்
வெஞ்சினச் சூரனை வீழ்த்திய போதும்
மேலாய் அருளிய வீரன்
அஞ்சிடும் போதினில் ஆறுதல் தருவான்
ஆறுமுகம் கொண்ட பிள்ளை
கொஞ்சிடும் செந்தமிழ் தந்தவன் தாளைக்
கும்பிட்டு வாழ்ந்திடு வோமே !


கண்ணிரண் டாறும் கருணையின் தோற்றம்
கந்தனின் உருவினில் காட்டும் !
எண்ணிடும் போதே இன்னலைத் தீர்ப்பான்
இன்முகம் ஆறிலும் அருளே;
பன்னிரு கையால் பாரினைக் காக்கும்
பைந்தமிழ்க் குமரனின் தாளைத்
தன்னிரு கையால் ஏத்தியே தொழுவார்
தரணியில் நீடுவாழ் வாரே !



Koviloor Digital Library

புதுச்சேரி முருகேசநகர் முருகன் கோவில் குடமுழுக்குக்காக எழுதிய கவிதை 2015

போற்றி வாழ்வோம் !



தேவரைக் காக்கவே தோன்றிய செய்யவேள்
திசைமுகன் தலையில்குட்டி
நாவசைத்(து) ஓம்என்ற மந்திரம் சொன்னவன்
நற்றமிழ் காத்தமுருகன்
பூவளர் சோலைசூழ் புருகீஸ் பேட்டையில்
புகழ்வளர் ஞானமுருகன்
பாவளர் வண்ணச் சரபனார் பதிகத்தின்
பைந்தமிழ் கேட்டவேலன் !

தெய்வானை வள்ளியுடன் திருவருள் புரிபவன்
சிவத்திரு ஞானியாரின்
சைவமுயர் பக்தியால் தக்கதொரு ஞானத்தைத்
தந்ததிரு உருவானவன்
மெய்மனம் செயலெலாம் மேவியே தொழுதிடின்
மேலான கருணைபுரிவான்
உய்வண்ணம் வேண்டுவோர் உருகியே நின்றிடின்
உடனருள் தெய்வமாவான் !

பிரணவப் பொருளினைப் பிரமனுக் குரைத்தவன்
பெற்றவன் சாமியானான்
அரனவன் பாதியாய் அமைந்தநல் உமையவள்
அணைப்பிலோர் உருவமானான்
திருமகள் கேள்வனின் மருமகன் முருகனின்
செம்மலர்ப் பாதம்போற்றி
ஒருமனம் நிலைத்திட உணர்வுடன் வணங்கினால்
ஓடிவரும் மயில்வாகனன் !

Koviloor Digital Library

காதலுக் காகவே காத்துக் கிடந்தவன்
கனியொன்று பெறவேண்டியே
நீதியின் முறைமையால் உலகினைச் சுற்றியே
நேர்மையின் வழிநின்றவன்
ஆதியும் அந்தமும் இல்லானின் கண்ணிலே
அக்கினிச் சுடரானவன்
சாதிகள் கடந்தவன் சகலர்க்கும் அருள்பவன்
சண்முகன் தாள்போற்றுவோம் !

வாரியார் சுவாமிகள் வளர்தமிழ்ப் புலவர்கள்
வழிபட அருள்செய்தவன்
நேரிழை வள்ளியை நேசமாய்க் கொண்டவன்
தெய்வ யானைதுணைவன்
நேரிலே அடியார்க்கு நிம்மதி கூட்டுவான்
நிகரிலா அழகானவன்
சூரனை வென்றவன் துயர்களைத் துடைப்பவன்
துணைத்தாளைத் தொழுதுவாழ்வோம் !

கரையேறி வாகீசர் காணவே திருக்காட்சி
காட்டிய நாதரோடு
தெரிசனாம் பிகைஎன்னும் தேவியார் வீற்றருள்
திருக்கோயில் சந்நிதியிலே
முருகேச நகரினில் எழுந்தருள் புரிகின்ற
மூலவர் முருகனருளே
வருகின்ற அடியவர் வாழ்வினில் பேரின்பம்
வழங்கிடும்: போற்றி வாழ்வோம் !



Koviloor Digital Library

Koviloor Digital Library

Thirumagal
04565 - 232591